பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 24 (10—10—72) செவ்வாய் வெளியூர்: புரட்டாசி 25 (11—10—72) புதன் [இதழ்: 97

## ஆண்டுக்கு நான்கு போகம்

தஞ்சை, அக். 10—
ஒரே நிலத்திலிருந்து ஆண்டுக்கு நான்கு போகம் விளைவிக்க முடியும் என்பதை தஞ்சையிலுள்ள 15 முற்போக்கு விவசாயக் குடும்பத்தினர் மெய்ப்பித்திருக்கின்றனர்.

கீமக்குறிச்சி, ஆவிக்கோட்டை, பரவக்கோட்டை ஆகிய கிராமங்களிலுள்ள குறிப்பிட்ட சில விவ

(4-ம் பக்கம் பார்க்க)

# தியாகத் தழும்புகளை ஏற்றவர்களே பதவியில் இருக்கின்றனர்

## கண்ணீரில் பிறந்தவர்கள்--ஏழையின் கண்ணீரை துடைப்பவர்கள்

### உரிமைக்குப் போராடும் ஒரே இயக்கம் தி.மு.க.-- ஆட்சியிலிருந்து அதனை இறக்கிவிட இயலாது

### எதிர்க் கட்சியினருக்கு முதலமைச்சர் கலைஞர் அறைகூவல்

சிவகங்கை, அக். 10—

"திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவிலேயே தலைசிறந்த ஆளும் கட்சியாக மட்டுமல்ல – தலைசிறந்த எதிர்க் கட்சியாகவும் இருக்கிறது; இந்த நிலை உருவாகிட நாங்கள் ஏற்ற அடிகளும் – பட்ட விழுப்புண்களும் – உதைகளும் ஏராளம்!

அமைச்சர் பதவியைத் திரும்பிப் பார்க்கின்றபோது ஏற்படுகின்ற புளகாங்கிதத்தைவிட, நாங்களெல்லாம் பாண்டிச்சேரியிலும்–தேனியிலும்–மதுரையிலும் – சிவகங்கையிலும் – பாளையங்கோட்டையிலும் தாக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட தழும்புகளைத் தடவிப் பார்க்கின்றபோது ஏற்படுகின்ற மகிழ்ச்சிதான் மகத்தானது"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், சிவகங்கையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

சிவகங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது.

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி. தலைமை தாங்கினார்.

அமைச்சர்கள் செ. மாதவன்—ப. உ. சண்முகம் -- சத்தியவாணிமுத்து மற்றும் சிவசண்முகம், தா. கிருட்டிணன் எம்.பி., ஏ.ஆர். பெருமாள், மதுரை மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. ஆகியோர் பேசினர்.

### பதவி நீங்கினால் தொடர்பு இருக்காதா?

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற ஐந்தாண்டுக்காலத்தில், ஏழைகளுக்காக -- கிராமப்புற விவசாயிகளுக்காக -- தொழிலாளர்களுக்காக என்னென்ன நன்மைகளை எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்துவருகிறது.

தி. மு. கழகத்தை ஆட்சியிலிருந்து இறக்கிவிடலாம் என சிலர் நினைக்கிறார்கள்; அமைச்சரவையிலிருந்து இறங்கி விட்டால் எங்களுக்கு மக்களுடன் உள்ள தொடர்பு அறுந்து விடுமா என்ன?

இது கண்ணீரில் பிறந்த கழகம் -- ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும் கழகம்!

இந்தச் சமுதாயத்தின் முன்னேற்றமே தி. மு. கழகத்தின் இலட்சியமாகும்; அதற்காக நாம் இழந்த உயிர்கள் -- அனுபவித்த சிறைத் தண்டனைகள் எத்தனை எத்தனையோ!

குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த நிலையிலும் சிறை சென்றவர்தான் இன்றைய அமைச்சரவையிலே அங்கம் வகிக்கும் சத்தியவாணிமுத்து!

இந்தியை எதிர்த்துச் சட்டப் பிரிவை எரித்துச் சிறை சென்றவர்தான் இன்றைய மேயர் முத்து; அவர், சிப்பியிலிருந்து வந்த முத்தல்ல -- சிறையிலிருந்து வந்த முத்து!

இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சிறை சென்று மீண்ட புடம்போட்ட தங்கம்தான் மாவட்டச் செயலாளர் தென்னரசு!

பலமுறை சிறை சென்றவர்தான் சட்ட அமைச்சராக இருக்கும் மாதவன்!

இப்படி யாரை எடுத்துக்கொண்டாலும், தியாகத் தழும்பு ஏற்றவர்களாகத்தான் இருக்கிறோம்!

### உரிமையைக் கோரும் ஒரே கட்சி தி. மு. க.

"இந்தி வேண்டாம் -- அதை ஏற்கமாட்டோம்" என்று சொல்லும் ஒரே கட்சி தி. மு. கழகம்தான்!

"மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும்; மக்களுக்கு நாங்கள் தந்த வக்குறுதிகள் நிறைவேற்றப்பட எங்களுக்கு உரிய உரிமையைக் கொடுங்கள்" என்று வலியுறுத்தி வருகின்ற ஒரே இயக்கம் தி. மு. கழகம்தான்!

### 'விடாதே-- நன்றாகக் கேள்' என்கின்றனர்

'மாநில சுயாட்சிக் கோரிக்கையை எல்லா மாநிலங்களும் ஏற்கிறதா' என்று கேட்கிறார்கள்; நான்கைந்து மாதத்திற்கு முன்பு வேறு மாநில முதல்வர் ஒருவரை நான் சந்தித்தேன்; 'மாநில சுயாட்சியை நீ பெற்றால் அது எங்களுக்கும் தானே வரப்போகிறது; விடாதே -- நன்றாகக் கேள்' என்றார் அவர்.

ஆகவே, அனைத்து மாநிலமும் மாநில சுயாட்சியை ஏற்றுக் கொள்கின்றன.

ஒரிசாவிலே இருக்கின்ற நந்தினி சத்பதியும் -- மத்தியப் பிரதேசத்திலே இருக்கின்ற சேத்தியும் -- வங்கத்திலே இருக்கின்ற சித்தார்த்த சங்கர்ராயும் -- மைசூரில் இருக்கின்ற அரசும் டில்லியிலிருந்து இறக்குமதியானவர்கள்.

ஆனால் நம்முடைய மாநிலத்தில்தான் முதலமைச்சர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்!

ஆகவேதான், மாநில சுயாட்சி கேட்பதில் இந்தியாவிலேயே தலைமை வகிக்கும் தானைத் தளபதியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது."

## அசாமில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டன

### மொழிக் கிளர்ச்சியின் எதிரொலி

ஷில்லாங், அக். 10—
பதட்ட நிலையிலிருந்துவரும் அசாம் மாநிலத்தின் பல மாவட்டங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எல்லாக் கல்வி நிறுவனங்களையும் மூடிவிடுமாறு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

அசாம் அரசின் மொழிக் கொள்கையை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி மேற்கொண்டிருக்கின்றனர்; இது வன்முறையாக மாறிவிட்டது; மாநிலமெங்கும் கொலையும் — கொள்ளையும் — தீ வைப்பும் நடந்திருக்கின்றன.

# எம்.ஜி.ஆர். 'சஸ்பெண்டு'

## பொதுச்செயலாளர் அறிவிப்பு

சென்னை, அக். 10—

திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள், சாதாரண உறுப்பினர் பொறுப்பு உட்பட, கழகத்தில் தாம் வகித்து வந்துள்ள பொறுப்புக்கள் அனைத்திலுமிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருக்கிறார்.

இதனை, கழகம் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இன்று ஓர் [illegible]றிக்கைமூலம் வெளியிட்டுள்ளார்.

கழகக் கட்டுப்பாட்டுக்கும் -- ஒழுங்குமுறைக்கும் புறம்பாக நடந்துகொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம், அவர்மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று விளக்கம் கேட்கப்பட்டுள்ளது; பத்து நாட்களுக்குள் விளக்கம் அளிக்கவேண்டுமே என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடமிருந்து கிடைக்கும் விளக்கத்தின்மீது மேற்கொண்டு தலைமைக் கழகம் உரிய முடிவினை மேற்கொள்ளும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிக்கனம் பற்றி மேடையில் முழக்கம்

### 2,000 பேருக்கு ஆடம்பர விருந்து

### இந்திரா காந்தி உட்பட உண்டுகளித்தனர்

காந்தி நகர், அக். 10—
அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் மாநாடு இப்போது இங்கு நடைபெற்று வருகிறது. உணவுத்தானியங்களின் மொத்த வணிகத்தை அரசே மேற்கொள்ள வேண்டுமென்று இந்தக் கூட்டத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

தீர்மானத்தை முன்மொழிந்து பாதுகாப்பு அமைச்சர் ஜெகஜீவன்ராம் பேசுகையில், உணவுத் தட்டுப்பாடு கடுமையாக இருந்துவரும் இந்த நேரத்தில் சிக்கனம் கடைபிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திக் கூறினார்.

இந்தத் தீர்மானம் நிறைவேறிய ஒரு மணி நேரத்திற்குள் காங்கிரசுப் பிரதிநிதிகளுக்கு விருந்து ஒன்று அளிக்கப்பட்டது.

ஆடம்பரமாக நடத்தப்பட்ட இந்த விருந்தில், பலதரப்பட்ட கறிவகைகள் பரிமாறப்பட்டன.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி உட்பட 2,000 பேருக்கு மேல் இந்த விருந்தில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

## பஞ்சாபில் மீண்டும் அமளி

சண்டிகார் அக். 10—
ஒருநாள் அமைதிக்குப்பின், பஞ்சாபில் மீண்டும் வன்முறை நிகழ்ச்சிகள் தலைதூக்கியிருக்கின்றன!

மாணவர்களால் நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டம் காரணமாகக் கடந்த வாரத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் இறந்தனர்; காயம்பட்டவர்களில் மேலும் ஒருவர் நேற்று இறந்தார்.

பஞ்சாபின் பல நகரங்களிலும் நேற்று வன்முறைகள் நடைபெற்ற போதிலும், அவைகளெல்லாம் சிறிய சம்பவங்களேஎன்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆயினும் பல இடங்களிலும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வெடித்தும் -- தடியடிப்பிரயோகம் நடத்தியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைக்கப்பட்டிருக்கின்றனர்.

சில இடங்களில் போலீசார் வானத்தை நோக்கிச் சுட்டுக் கூட்டத்தைக் கலைத்தனர்.

சுமார் 2,000 மாணவர்களைக் கொண்ட மாணவர்கள் கூட்டம் ஒன்று நேற்று காங்கிரசு அலுவலகத்தைத் தாக்கி தீயிட முயன்றது; இதனால், மேசை -- நாற்காலிகளும், மற்றும் பல பொருட்களும் சேதமடைந்தன.

# வாய்மையால் வென்றது கழகம்

## வன்செயலால் வீழ்த்த நினைத்தோர் வீழ்ந்துபட்டனர்

### தமிழ்ச் சமுதாயத்தின் விழியைத் திறந்தவர் தானைத் தலைவர் அண்ணா

அவர் தோற்றுவித்த கழகத்தை எந்தச் சக்தியினாலும் அழித்துவிட முடியாது

### இராணி — அண்ணா மன்ற விழாவில் நாவலர் முழக்கம்

சென்னை அக். 10—

"கொலை செய்த கட்சிகள் — தலைமறைவாக வாழ்ந்த கட்சிகள் — வன்முறைச் செயல் செய்யத் துணிந்த கட்சிகள் — தண்டவாளத்தைப் பிடுங்கியும், தந்திக் கம்பியை அறுத்தும், அஞ்சல் அலுவலகங்களையும் கொளுத்திய கட்சிகள் எல்லாம் அரசியலை வன்முறைகள் மூலம் நடத்தப் பார்த்தனர்; ஆனால், 'மாற்றார்கள் தாக்கும்போதுகூட கத்தியைத் தீட்டாதே — புத்தியைத் தீட்டு' என்று கூறி அண்ணா அவர்கள் கழகத்தை வளர்த்தார்.

"புத்தியைத் தீட்டியவனின் புத்திதான் மக்களால் ஈர்க்கப்படுமே தவிர, தமது கொள்கைகளைத் திணிப்பதற்காகக் கத்தி கொண்டு குத்தி அதை மனிதனுக்குள் ஏற்றிவிட முடியாது! இந்த உண்மை பெற்ற வெற்றிதான் தி. மு. கழகத்தின் வளர்ச்சி!

"வாய்மையே வெல்லும் என்பார்கள்; அதனைப் பிரித்தால், 'வாய்' — 'மை' என்று வருகிறது; அதுபோல், வாயும் மையும்தான் வென்றிருக்கிறது"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசுகையில் கூறினார்கள்.

சென்னை 33-வது வட்டம் இராணி அண்ணா மன்றத்தின் 10-வது ஆண்டு விழாவும்-அண்ணா பிறந்த நாள் விழாவும்-அண்ணியாருக்கும் பொன்னாடை போர்த்தும் விழாவும்—பொதுச்செயலாளர் நாவலருக்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றது.

விழாவையொட்டி 1,000 ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

அண்ணியார் அவர்களுக்கு திருமதி மோகனா பொன்னாடை அணிவித்தார்.

மன்றச் சார்பில் அமைச்சர் நாவலருக்குப் பாராட்டிதழ் வாசித்தளிக்கப்பட்டது.

புரசை சீனிவாசன் குழுவினரின் நாதசுர இன்னிசை விருந்து நடைபெற்றது.

விழாவிற்கு திரு. கன்னியப்பன் தலைமை நடைபெற்றது; —குமார் வரவேற்றார்.

அமைச்சர் க. இராசாராம், எம். ஏ. ஹக்கீம், கோ. சி. வரதன், ஏழுமலை எம்.சி., கரிகாலன், முன்னாள் துணை மேயர் கிருஷ்ணமூர்த்தி, தென்னவன் ஆகியோர் பேசினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் நாவலர் அவர்கள் பேசியதாவது:-

"எங்களையெல்லாம் பல்கலைக்கழகங்கள் மதிக்கக் காரணமானதே நீங்கள் எங்களுக்குத் தந்த மதிப்புத்தான்!

மாற்றாரின் ஏளனம் — இழிசொற்களையெல்லாம் தாங்கித் தாங்கி— அவர்களுடைய வன்முறைச் செயல்களையெல்லாம் தாங்கித் தாங்கிக் கழகத்தைக் கட்டிக் காத்து நீங்கள் வளர்த்ததால் தான், அண்ணாவையும்—கலைஞரையும் என்னையும் தேடிப் பிடித்துப் பல்கலைக்கழகங்கள் பட்டம் தந்திருக்கின்றன!

இதற்கெல்லாம் அடிப்படை அண்ணா அவர்கள்தான்; அவர் இல்லையென்றால் கழகமும் இல்லை; கழகம் இல்லையென்றால் கழக அரசின் ஆட்சியும் இல்லை; எனவே, எங்களையெல்லாம் நீங்கள் பாராட்டுவதற்குக் காரணமே அண்ணா அவர்கள்தான்!

நிலாவைப் பாடாத புலவர்களே இல்லை எனலாம்! அத்தகைய நிலவுக்கு ஒளி தந்தது கதிரவன் தான்; அதுபோல், அண்ணா என்னும் கதிரொளிபட்ட நிலவுதான் நாங்கள் எனலாம்!

1948-ல் இந்தச் சூளை பகுதியிலே எங்களை நுழையவிட்டதில்லை; அப்படியே நுழைந்தாலும் அடியாட்களைக் கொண்டு கூட்டத்தைக் கலைப்பார்கள்; நாய்—பன்றி—கழுதை போன்ற மிருகங்களை விரட்டிவிட்டுக் கூட்டம் நடைபெற இயலாமல் செய்துவிடுவார்கள்!

அப்படியெல்லாம் 'அகிம்சை'யின் பெயரால் செயலாற்றியவர்கள், கழகத்தின் கொடிகள் பறந்த கம்பங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்த நிகழ்ச்சிகளும் உண்டு!

அப்படியெல்லாம் கழகக் கொடிக் கம்பத்தை வெட்டியவர்கள் — இரண்டாகக் கம்பத்தைப் பிளந்தவர்கள் என்ன ஆனார்கள்? — அவர்களே இரண்டாகப் பிளந்து போய் 'இண்டிகேட் — சிண்டிகேட்' என்று ஆனார்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அறிஞர் பட்டத்தைத் தந்தவர் யார் — என்று ஏளனம் செய்தவர்கள் உண்டு; அப்படிக் கேட்டவர்கள் எல்லாம் இப்போது விலாசம் தெரியாமல் மறைந்து போய் விட்டார்கள்!

இப்போதெல்லாம் எங்களை மாலை சூட்டி வரவேற்கிறீர்கள்; பொன்னாடை அணிவித்தும் பெருமைப் படுத்துகிறீர்கள்; ஆனால் அன்றெல்லாம நாங்கள் கூட்டங்களுக்குச் சென்றால், கூட்டத்தில் எத்தனை மாலைகள் விழுந்தன என்று எண்ண முடியாது; 'எத்தனைக் கற்கள் விழுந்தன' என்று தான் எண்ணுவோம்!

'நேற்று பத்துக் கற்கள் விழுந்தன — அடுத்த நாள் எட்டுக் கற்கள் விழுந்தன' என்றெல்லாம் அன்று எங்கள் மீது கல்மாரியும் — வசைமாரியும் பொழிந்த நிலைதான் இருந்தது!

அப்படியெல்லாம் கற்களை வீசிக் கழகத்தைக் கலைத்துவிட எண்ணியவர்களிடமிருந்தும், கருப்புச் சட்டை மாநாட்டிற்கு நெருப்பு வைத்துக் கொளுத்தியவர்களிடமிருந்தும் இன்று கழகம் 18 ஆண்டுகளில் ரூ. 300 கோடி வரவு — செலவு நடத்தும் ஆட்சியைப் பிடித்துள்ளது என்றால், அதற்குக் காரணம் அண்ணா அவர்கள் காத்த நா நலம்தான்!

கழகம் நம்பி வளர்ந்தது — அண்ணாவின் பேனாவையும், நாவையும்தான்!

### அமைச்சர் இராசாராம்

பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"எத்தனையோ தலைவர்கள் பிறக்கிறார்கள் — வாழ்கிறார்கள்; ஆனால், அண்ணாவைப்போல் ஒரு தலைவர் இந்தியத் துணைக் கண்டத்தில் பிறந்ததில்லை எனலாம்; ஏனென்றால் கழகத்தைக் குடும்பப் பாச உணர்ச்சியுடன் வளர்த்த தலைவர் அண்ணா அவர்களாவார்.

எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன; எந்தக் கட்சியும் கழகத்தைப் போல் குடும்பப் பாசத்தோடு வளரவில்லை!

அண்ணா அவர்கள் தங்கத் தொட்டிலிலே சீராட்டப்பட்டு வளர்ந்தவரல்லர்; சாதாரணக் குடும்பத்தில் பிறந்து — எத்தனையோ சிரமத்துடன் படித்து — எம்.ஏ. பட்டம் பெற்ற அவர், தன் படிப்புக்கு ஏற்ற வருவாய் கிடைக்கும் தொழிலில் நுழையாமல் தந்தை பெரியார் அவர்களின் 'குடியரசு' அலுவலகத்தில் ரூ. 50 சம்பளத்தில் பணியாற்றினார்.

அவருக்கு அது குறைந்த ஊதியம்தான் என்றாலும், 'தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சிக்காகப் பாடுபட வேண்டும்' என்கின்ற இலட்சியத்தின் பாசறையாக அந்தத் துறையை எண்ணித் தன்னைப் பிணைத்துக் கொண்டார்!

இன்று தமிழகம் வந்து பேசும் இந்திரா அம்மையார்கூட, தம்முடைய உரையை முடிக்கும் போது, 'வணக்கம்' என்று கூறும் அளவுக்குத் தமிழகத்தில் ஒரு மலர்ச்சியை — தமிழில் ஒரு புதிய மலர்ச்சியை உண்டாக்கிய பெருமை அண்ணாவையே சாரும்!

வன்முறையின் மூலம் அல்லாமல், அன்பு வழி மூலம் கொள்கையைப் பரப்பு — வாக்குச் சீட்டின் மீது நம்பிக்கை வைத்து — நாட்டில் நல்வாழ்வை உருவாக்கிக் காட்டிய தலைவர் அண்ணா.

அத்தகைய தலைவர் கண்ணீராலும் — செந்நீராலும் கட்டிக் காத்த இந்தக் கழகத்தை அழித்து விடலாம் என்று சிலர் கனவு காணலாம்; ஆனால் எவராலும் கழகத்தை அழித்துவிட முடியாது!

'கட்சி அழிந்துவிடாதா' என்று கனவு காணுவோருக்குச் சொல்லிக்கொள்வேன் — இந்தத் தமிழ்ச் சமுதாயத்தின் விழியைத் திறந்த தானைத் தலைவன் உருவாக்கிய இந்தக் கழகத்தை, இந்தச் சமுதாயம் விழிப்புடன் இருக்கின்ற வரையில் யாராலும் அசைத்துவிட முடியாது' என்று!"

# 30 ஆண்டுக்காலம் புறக்கணிக்கப்பட்ட கோரிக்கை

## கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது

### மதுரை — இராமேசுவரம் இருப்புப்பாதையில் மேம்பாலம்; முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்தார்

மதுரை, அக். 9—

மதுரை சுப்பிரமணியபுரம் மேம்பாலத்தை முதல்வர் கலைஞர் திறந்துவைத்தார்.

மதுரை — இராமேசுவரம் இருப்புப் பாதையைக் கடப்பதற்காக அமைந்துள்ள இந்த மேம்பாலம், ரூ. 37 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

தலைமைப் பொறியாளர் சி. வே. பத்மநாபன் அனைவரையும் வரவேற்று — அறிக்கை ஒன்றினையும் அவர் படித்தார்.

பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை தாங்கினர்.

மேயர் எஸ். முத்து எம்.எல்.சி., அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

### முதல்வர் கலைஞர்

பாலத்தைத் திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:—

"மதுரை—இராமேசுவரம் இருப்புப் பாதையின் குறுக்கே அமைந்துள்ள இந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டிருப்பதால், நாள்தோறும் 14 தடவை தண்டவாளத்தைக் கடக்கும்போது அடைக்கப்பட்டு—அதனால் போக்குவரத்துக்கு ஏற்பட்டிருந்த தடங்கல் நீங்கி இருக்கிறது.

இந்தப் பாலம் திறக்கப்படுவதன் மூலம் போக்குவரத்தில் வேகமும் விறுவிறுப்பும் ஏற்படும்.

இந்தப் பாலத்திற்கான துவக்கப் பணி 26—11—70-ல் தொடங்கப்பெற்று, மத்திய அரசு சார்பில் இரயில்வேத்துறை ரூ. 10 இலட்சமும் — மாநில அரசு ரூ. 14 இலட்சமும் — மீதியை மாநகராட்சியும் ஏற்றுக்கொண்டு முழுமை பெற்றிருக்கிறது.

இந்தப் பாலம் இங்கு அமைய வேண்டும் என்பது கடந்த முப்பதாண்டுக் காலமாக மதுரை நகர மக்களால் எழுப்பப்பட்டு வந்த கோரிக்கையாகும்.

தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப் பேற்றபோது, 1967 வரையில் திட்டங்கள் வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருந்த பால வேலைகள் 50 ஆகும்; அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 372 இலட்சம்; ஆனால் 1967-க்குப் பின் ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள பால வேலைகள் 72 ஆகும்; அவற்றிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 694 இலட்சம்.

சுரங்கப் பாதைகளும் — மேம்பாலங்களுமாக 20 ஆண்டுக் காலத்தில் அமைக்கப்பட்டவை 11.

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற 5 ஆண்டுகளில் அமைக்கப்பட்டுள்ள மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் 12 ஆகும்.

1972-லிருந்து 1974-வரையில் ஏற்படுத்தப்படவிருக்கும் பாலங்கள் மட்டும் 10; மேம்பாலங்களும் சுரங்கப் பாதைகளும் மொத்தம் 28."

### விஷமச் செய்திக்கு மறுப்பு

திருச்சி வட்ட தி.மு.க. செயலாளர் மு. நடராசன் அறிவிப்பதாவது:—

"5—10—72 'தினமலர்' (திருச்சி) இதழ் மூன்றாம் பக்கத்தில், 'எம். ஜி. ஆர். தலைமை மன்றத் திறப்பு விழா' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில் என் பெயர் இணைக்கப்பட்டுள்ளது; நான் கலந்துகொள்ளாத மேற்கண்ட நிகழ்ச்சியில் நான் பேசியதாகத் தவறான செய்தியைப் பொறுப்பற்ற முறையில் வெளியிட்டிருப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.

சில பத்திரிகைகள் எந்த அளவிற்குப் பொய்ச் செய்திகளை வெளியிட்டுச் சிண்டு முடிந்துவிடும் வேலையில் இறங்கியுள்ளன என்பதற்கு 'தினமலரி'ல் வெளிவந்துள்ள இந்தச் செய்தியே சான்றாகும்.

எனவே, 'கழகத்தில் குழப்பம் வராதா' என்று ஏங்கிக்கொண்டிருக்கும் இத்தகைய பத்திரிகைச் செய்திகளை நம்ப வேண்டாமென்று கழகத் தோழர்களையும் — பொதுமக்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்."

இந்த தீபாவளிக்கு 10% விசேட தள்ளுபடி

வண்ணத்துப் பூச்சியின் பிரத்தியேகமான கவர்ச்சி உங்களுக்கு புத்தொளியும், புதுப்பொலிவும் தரும். புத்தம் புதிய கையிருப்பு, நவீன நாகரிக டிசைன்கள், புரட்சிகரமான மாதிரிகள், ஒவ்வொரு கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

புகழ் பெற்ற காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுகள், பரவசம் தரும் பருத்தி ஆடைகள், கிளாசிக் ரெடிமேட் கைத்தறி ஷர்ட்டுகள், மற்றும் பட்டு டைகள் கிடைக்கும்.

வண்ணத்துப்பூச்சி உங்கள் நல்வரவுக்காக நாடெங்கிலுமுள்ள முன்னூற்று-ஐம்பது விற்பனை நிலையங்களில் காத்திருக்கிறது.

வண்ணத்துப்பூச்சி 10% விசேட தள்ளுபடியில் தருகிறது. (தள்ளுபடியை தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது) தமிழக அரசு ஊழியர்களுக்கு கடன் வசதித் திட்டம் வழக்கம் போல் வழங்கப்படும்.

விசேட தள்ளுபடி 1—10—'72 முதல் 9—11—'72 வரையில்.

கோ-ஆப்டெக்ஸ் கைத்தறிஆடைகள்

Criterion CO 2779TMC

# கழக ஆட்சியில் ஆலய நிர்வாகம்

## ஒழுங்கான வரவு — செலவால் வருவாய் பெருகுகிறது

### அறப்பணிகளுடன் திருப்பணிகளும் செவ்வனே நடைபெறுகின்றன

மதுரை மீனாட்சி கோவிலில் முதலமைச்சர் கலைஞர் விளக்கவுரை

மதுரை, அக். 9—

"அறிஞர் அண்ணா சொன்னதுபோல், இறைவனை ஏழையின் சிரிப்பில் காண்பதற்கு அந்த ஆண்டவனுக்குப் பிடித்தமான காரியங்களையெல்லாம் கழக அரசு செய்து வருகிறது.

"உற்சவங்கள் நடக்கின்றன — தேர்கள் ஓடுகின்றன தெப்பம் மிதக்கிறது; அவையெல்லாம் பாதிக்கப்படாமலும் — கோவில்களிலிருந்து கிடைக்கும் வருமானம் பெட்டியில் தூங்காமலும் — வங்கிகளில் தேங்காமலும் பொதுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

"இதுவரையில் 5 000 ஏழைகளுக்கு அறநிலையத் துறையின் சார்பில் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டிருக்கின்றன; மருத்துவ வசதிகள் தரப்பட்டிருக்கின்றன; பள்ளிக் கட்டடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன; பல்வேறு அறப்பணிகள் நடைபெற்றுவருகின்றன.

"பண்டைக் காலந்தொட்டுக் கோவில்கள் கல்வி நிலையங்களாகவும் — பயிற்சி மண்டபங்களாகவும் — கலை அரங்கங்களாகவும் — மருத்துவ வசதி அளிக்கும் இடங்களாகவும் இருந்திருக்கின்றன; ஆனால் இடைக்காலத்தில் தான் அந்த அறப்பணிகள் நலிவுற்றுப்போய்விட்டன; அந்தப் பணிகளைத்தான், திருப்பணிகளோடு அறப்பணியாக ஆற்றிடக் கழக அரசு பாடுபட்டுவருகிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் சார்பில் பிர்லாவின் உதவியுடன் அமைக்கப்பட்ட பயணிகள் விடுதியை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

விழாவிற்கு அறநிலையத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் தலைமைதாங்கினார்.

அறங்காவலர் குழுத் தலைவர் நாராயணன், அனைவரையும் வரவேற்றார்; பிர்லாவின் படத்தையும் திறந்து வைத்தார்.

பயணிகள் விடுதியைத் திறந்து வைத்த முதலமைச்சர், இதே ஆலயச் சார்பில் கட்டப்படவிருக்கும் திருமண மண்டபத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

விழாவில் மதுரை நகர மேயர் எஸ். முத்து எம்.எல்.சி., அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், எஸ். ஜே. சாதிக் பாட்சா, ஓ. பி. இராமன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சீதாராமதாஸ் மற்றும் சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

விடுதியைத் திறந்துவைத்தும் — திருமண மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டியும் வைத்த முதல்வர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:—

"தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் அறநிலைய நிர்வாகங்களும் — திருப்பணிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

'தி. மு. கழகத்தினர் ஆட்சிக்கு வந்தால் கோவில்களின் முன்னால் இருக்கும் திருக்குளங்களில் தெப்பங்கள் மிதக்குமா? ஆண்டாண்டுதோறும் ஓடுகிற தேர்களும்-பல்லாண்டுகளாக ஓடாமலிருக்கும் தேர்களும் ஓடுமா?' என்றெல்லாம் கேட்டார்கள்.

ஆனால், கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் கோவில்களில் நடைபெறுகின்ற ஆறு கால பூஜைகளும் — அபிஷேக ஆராதனைகளும் சிறப்பாகத்தான் நடைபெற்று வருகின்றன.

அத்துடன், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆலய வருமானமும் அதிகமாகி இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

மதுரை மீனாட்சி ஆலயத்தின் வருமானம் 1967-ல் ரூ. 13 இலட்சமாக இருந்தது; 1968-ல் அது ரூ. 14 இலட்சமாகவும், 1969-ல் ரூ. 15,25,000 ஆகவும், 1970-ல் ரூ. 16 50 000 ஆகவும், 1971-ல் ரூ. 18 இலட்சமாகவும் பெருகியிருக்கிறது.

1967-ல் ரூ. 13 இலட்சமாக இருந்த மீனாட்சியம்மன் கோவில் வருமானம் ரூ. 18 இலட்சமாக உயர்ந்திருப்பது கழக ஆட்சியில்தான்!

இந்த உயர்வு, பக்தர்களின் வரவினால் மட்டும் என்று எண்ணிவிட வேண்டாம்; 'கழக ஆட்சியில், வரவு — செலவும் ஒழுங்காக இருக்கிறது' என்பதைத் தான் இது காட்டுகிறது.

திருச்செந்தூர் கோவிலை எடுத்துக் கொண்டால், 1967-ல் அதன் ஆண்டு வருமானம் ரூ. 12 இலட்சமாகும்; அதே கோவிலின் இப்போதைய வருமானம் ரூ. 19,37,000; 1967-லிருந்து 1971-க்குள் திருச்செந்தூர் கோவில் வருமானத்தில் உயர்வு ஏறத்தாழ ரூ 7 50 இலட்சமாகும்.

அழகர்கோவிலின் வருமானம் 1967-ல் ரூ. 5,15,000; 1971-ல் வருமானம் ரூ 6,50,000.

மதுரையிலே உள்ள கூடலழகர் கோவிலை எடுத்துக் கொள்ளுங்கள்; 1967-ல் அதன் வருமானம் ஆண்டுக்கு ரூ. 65,000; 1971-ல் அது ரூ. 80,000 ஆக உயர்ந்திருக்கிறது.

பழனி தேவஸ்தானத்தின் வருமானம் 1967-ல் ரூ. 34 இலட்சமாக இருந்தது; 1968-ல் அது ரூ. 36 இலட்சமாகவும், 1969-ல் ரூ. 40 இலட்சமாகவும், 1970-ல் ரூ. 44 இலட்சமாகவும், 1971-ல் ரூ 55 இலட்சமாகவும் உயர்ந்திருக்கிறதே — இந்த உயர்வு கழக ஆட்சியில் ஏற்பட்டுள்ள உயர்வா இல்லையா?

இதற்கெல்லாம் கழக ஆட்சியில் நடைபெற்றுவரும் நல்ல நிர்வாகமும் — திறமையுள்ள செயலாற்றலும்தான் காரணம்!

இப்படிக் கோவில்களில் பெருகும் வருமானத்தைக் கொண்டு கழக ஆட்சி அறப் பணிகளையும் ஆற்றிவருவதை அறிவீர்கள்.

அறப்பணிகள் மட்டும்தானா — கோவில்களில் திருப்பணிகளும், பாழடைந்த கோவில்களைப் பழுது பார்க்கும் வேலைகளும் அந்த வருவாயில் பயன்படுத்தப்படுகிறது!"

### கருத்தடை அறுவைச் சிகிச்சை

புதுடில்லி, அக். 9—

கருத்தடை அறுவைச் சிகிச்சை முகாம்கள் பல்வேறு மாநிலங்களில் சென்ற மாத மத்தியில் துவக்கப்பட்டன.

ஆறு மாநிலங்களில் இதுவரையில் மொத்தம் 1,13,956 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டன.

இந்தக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள ஆறு மாவட்டங்களில் மொத்தம் 14,566 ஆண்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

# ஆசியாவிலேயே பெரிய மீன் தூள் தொழிற்சாலை

## மண்டபத்தில் திறந்துவைத்தார் முதல்வர் கலைஞர்

### தமிழக மீனவர்களின் நிலையை உயர்த்த அரசு பாடுபடும் என உறுதி

இராமநாதபுரம், அக். 10—

"மேல்நாட்டில் கடல் வளத்தை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டபோது, நம் நாடு அந்த நிலையை எப்போது அடையும்' என்று எண்ணினேன்.

"வாழ்வை நம் நாட்டு மீனவர்கள் சந்தேகமாக நினைக்கின்றனர்; கடலில் மீன் பிடிக்கப் போகும்போது வீட்டிலுள்ளவர்களிடம், 'வந்தால் வரவில் வை—வராவிட்டால் செலவில் வை' என்று கூறிவிட்டுப் போகிறார்கள்!

"மேல் நாட்டு மீனவர்கள் வாழ்வை நம்புகிறார்கள்; அச்சமற்றுத் துணிவோடு சென்று திரும்புகிறார்கள்!

"300 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் மரக்கலம்—நாவாய்—படகு ஆகியவற்றில் பல ஆயிரம் மைல்களைக் கடந்து சென்று—வெளிநாட்டு மண்ணைத் தொட்டுவிட்டு வந்ததாக இலக்கியம் கூறுகிறது; எனவே, தமிழர்களின் துணிச்சலுக்குக் குறைவில்லை; ஆனால் அது கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வந்திருக்கிறது.

"புலி வேட்டைக்குப் போகிறவன் பூனை குறுக்கே வந்தால் பயப்படும் நிலைக்கு நாம் வந்துவிட்டோம்; 'நம் குடும்பம் என்ன ஆவது' என்ற அச்சம் மீனவர்களிடமிருந்து விலகித் தீரவேண்டும்; இந்தத் தொழிலுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்; ஆயிரக்கணக்கான விசைப் படகுகள் தமிழ்நாட்டுக் கடற்கரையை அழகுப்படுத்த வேண்டும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன் தூள் தயாரிப்பு நிலையத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

"வெளிநாடுகளில் உள்ள மீனவர்களின் நிலைக்குச் சமமாகத் தமிழ்நாட்டிலுள்ள மீனவர்களின் நிலையை உயர்த்தத் தமிழக அரசு பாடுபட்டு வருகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

"மீனவர்களுக்கு நவீன மீன்பிடிக் கருவிகளை அளிக்கவும்—அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்தவும் அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது" என்றும் தெரிவித்தார்.

மண்டபம் பகுதியில் இந்தியா—நார்வே தொழில் துறைக் கூட்டுறவுடன் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் திட்டத்தின் மீன் தூள் நிலையம், கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரியதாகும்; நாள்தோறும் 50 டன் மீன் தூள் இந்த ஆலையில் தயாரிக்கப்படும்.

#### அமைச்சர் சத்தியவாணிமுத்து

இந்நிகழ்ச்சிக்கு மீன்வளத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து தலைமை வகித்து மீன் வளத்தை மேம்பாடு செய்வதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளை விளக்கினார்; இந்நிலையத்தில் தயாரிக்கப்படும் மீன் தூளை பிஸ்கட்டுகளாகவோ அல்லது இதரவைப் பண்டங்களாகவோ தயாரிக்க முடியுமா என்பதை ஆராயுமாறு கேட்டுக்கொண்டார்; அவ்வாறு தயாரிப்பதன் மூலம் மக்கள் அதனை உணவாகக் கொள்ள முடியும் என்றார்.

"இந்தக் கடற்கரைப் பகுதியில் மேற்கொண்டு மீன் வளத்தை ஆராய்வதற்காக ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது; ஏற்கனவே ரூ. 2 கோடி முதல் ரூ. 3 கோடி அந்நியச் செலவாணி கிடைக்கும் வகையில் 2 இலட்சம் டன் மீனை நாம் ஏற்றுமதி செய்து வருகிறோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

#### அமைச்சர் செ.மாதவன்

தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் பேசுகையில் மீன் வளத் தொழிலை வளர்ச்சியடையச் செய்வதன்மூலம் பல துணைத் தொழில்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு கிடைக்கச்செய்ய முடியும்' என்றார்.

"தமிழ்நாட்டில் நைலான் மீன்பிடி வலைத் தயாரிப்பு ஆலை ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம்; உப்பு உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்வதற்கும்—உப்பை ஆதாரமாகக் கொண்ட தொழில்களை அமைக்கவும் அரசு உப்பு வளவாரியம் ஒன்றை அமைத்துள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு; [illegible] அச்சகத்தில் (84, [illegible] [illegible]) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

#### அமைச்சர் ப. உ. சண்முகம்

வருவாய்த் துறை அமைச்சர் ப.உ. சண்முகம் அவர்கள் பேசுகையில், 'தமிழ்நாட்டில் இன்னும் பல மீன் தூள் தயாரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்' என்றார்.

#### ரூ. 6,000 ரொக்க உதவி

மண்டபம் கடலில் மீன் பிடிக்கப் போனபோது காணாமற்போன ஒரு மீனவரின் மனைவிக்கு ரூ. 1,000 பண உதவியை முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்.

வேளாண்மைத் துறை இணைச் செயலாளர் பி. கந்தசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை விளக்கினார்; '5 ஆண்டுக் காலத்துக்குள் மீனவர்களுக்கு 1,000 விசைப் படகுகளை வழங்க அரசு திட்டமிட்டிருக்கிறது' என்று அவர் தெரிவித்தார்.

மீன் வளத் துறை இயக்குநர் டி.வி. வெங்கடராமன் நன்றி கூறினார்.

#### கண் சிகிச்சை நிதிக்கு...

மீனவர் கூட்டுறவுச் சங்கச் சார்பிலும்—தாழையூத்து கல்லுக்கும் தொழிலாளர்கள் சார்பிலும் முதலமைச்சரிடம், கண் சிகிச்சை முகாம் நிதியாக ரூ. 151 வழங்கப்பட்டது.

#### தி.மு.க. சார்பில் வரவேற்பு

மண்டபம் தி.மு.க. சார்பில் முதலமைச்சருக்கு வரவேற்பு இதழ் படித்தளிக்கப்பட்டது.

#### முதலமைச்சர் கலைஞர்

மீன் தூள் நிலையத்தைத் திறந்து வைத்து முதலமைச்சர் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"இராமநாதபுர மாவட்டம் பல்வேறு பயன்களை வேகமாகப் பெற்று வருகிறது; இந்தியா—நார்வே ஆகிய இரு நாட்டு உறவு அடிப்படையில் இந்த நிலையம் கட்டப்பட்டிருக்கிறது; இந்த நிலையம் தென் கிழக்கு ஆசியாவிலேயே பெரியது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

காறல் மீன்—வேறு சில மீன் கழிவுகளைச் சேர்த்து இந்த மீன் உணவு தயாரிக்கப்படுகிறது.

பட்டினத்துக்காரர்கட்குப் புரியும்படியாகக் கூற வேண்டுமென்றால், காலையில் விற்காத இட்டிலியைத் தூளாக்கி மாலையில் மைசூர் உப்புமா என்று விற்பது போல, கிராக்கி இல்லாத சாதாரண மீன்களைக் கொண்டு அந்தத் தூள் தயாரிக்கப்படுகிறது; இந்தத் தூளை மனித உணவாக்க ஆய்வு நடந்து வருகிறது.

தமிழ்நாட்டில் 1,000 கிலோ மீட்டர் நீளக் கடற்கரை உண்டு; இதில் ஓர் இலட்சம் பேர் மீன் பிடிக்கிறார்கள்; இவர்களில் 30,000 பேர் கட்டு மரங்களிலும், 1,500 பேர் விசைப் படகுகளிலும் மீன் பிடிக்கிறார்கள்.

1,500 விசைப் படகுகள் 25,000 விசைப் படகுகளாக வளர வேண்டும்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது மறைந்து—மாய்ந்து போனால், அந்த மீனவர் குடும்பத்துக்கு ரூ 1,000 உதவிப் பணமாகத் தருகிறோம்; இந்தத் திட்டத்தைத் தி.மு. கழகம் ஏற்படுத்தியது; இரண்டாண்டுகளில் ஏறத்தாழ 30 பேருக்கு இம்மாதிரி உதவி கிடைத்துள்ளது.

மீன்பிடிப் படகுகள் தீ விபத்துக்குள்ளானபோது இந்த அரசு ரூ. 67,000 வழங்கியது; மீனவர் வாழ்வு உயரப் பாடுபடும் அரசு—தமிழக அரசுதான்!"

# கூடலழகர் கோவிலில் கலைஞர்

## திருமண மண்டபத்தைத் திறந்துவைத்தார்

மதுரை, அக். 10—

மதுரை கூடலழகர் பெருமான் கோவிலுக்குள் புதிதாகக் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபத்தை முதல்வர் திறந்துவைத்தார்.

முதலமைச்சருடன் சென்ற அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பனுக்கும்—முதல்வருக்கும் கோவில் நிர்வாகிகள் 'பரிவட்டம்' கட்டி வரவேற்றனர்.

மாநகராட்சி உறுப்பினர் சந்தானம் வரவேற்புரை ஆற்றினார்.

விழாத் தலைமையை ஏற்று அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் உரையாற்றினார்.

மேயர் எஸ். முத்து எம்.எல்.சி. பேசினார்.

திருமண மண்டபத்தைத் திறந்து வைத்து முதலமைச்சர் உரையாற்றினார்.

# மூன்று தலைமுறைக்குச் சொத்துச் சேர்க்கும் முதல்வர்கள்

## சொந்தக் கட்சியிலேயே நடக்கும் ஊழல்கள் பற்றி இரு முதலமைச்சர்கள் தகவல்

காந்தி நகர், அக். 10—

ஊழல்—இலஞ்சமும் நாட்டில் பெருகிவருவதில், காங்கிரசு முதலமைச்சர்கள் இருவர் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கடும் கவலை தெரிவித்தனர்.

"முதலமைச்சர் என்ற முறையில் வெறும் ஆறுமாத அனுபவத்திலேயே சில உண்மைகளை நான் புரிந்துகொண்டேன்; இலஞ்சத்தை ஓரளவுக்காவது நாம் கட்டுப்படுத்தவில்லையானால், நமது எந்தப் பொருளாதாரத் திட்டமும் வெற்றி பெறப்போவதில்லை என்பதை நாம் உணர வேண்டும்" என்று மேற்கு வங்க முதல்வர் சித்தார்த்த சங்கர ரே கூறினார்.

மத்தியப் பிரதேச முதலமைச்சர் பி. சி. சேத்தி கூறியதாவது:—

"நாட்டில் பரவலாகவே ஒழுக்கமும்—பண்பாடும் குறைந்து போயிருக்கிறது. எந்த வழியிலேனும் பணம் சேர்க்க வேண்டும் என்ற ஆசை ஒவ்வொருவரிடமும் இருக்கிறது.

ஒருவர் முதலமைச்சராக ஆகிவிட்டால், தனது தேவைக்கு மட்டும் அவர் சொத்துச் சேர்ப்பதில்லை; தமது மூன்று—நான்கு தலைமுறைக்கும் சேர்த்து சொத்துச் சேர்க்க விரும்புகிறார்.

இதே நிலை தொடர்ந்து நீடித்துக் கொண்டு போனால் நம்மை யாராலும் காப்பாற்ற முடியாது. டாக்டர்களாகிய நாம் முதலில் நம்மைக் குணப்படுத்திக் கொள்ள வேண்டும்; பிறகு தான் மற்றவர்களைக் குணப்படுத்த முடியும்."

# 23,000 பேருக்கு நிலப் பட்டா—1,000 பேர்களுக்கு மூக்குக் கண்ணாடி

## மேலூரில் முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

மதுரை, அக். 10—

மேலூரில் நடந்த விழா ஒன்றில், மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சுமார் 23 000 பேருக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிலம்—வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

மேலூரில் நடந்த கண் சிகிச்சை முகாமில் கண் அறுவைச் சிகிச்சைகொண்ட சுமார் ஆயிரம் பேருக்கு முதலமைச்சர் மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்.

கண் சிகிச்சை முகாம்கள் நடத்துவதற்காக ரூ. 1 02 இலட்சத்துக்கு ஒரு 'செக்'கை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். ஏ. சீதாராமதாஸ் முதல்வரிடம் அளித்தார்.

முதலமைச்சர் பேசுகையில் 'சோஷலிசத்தை மனப்பூர்வமாக நிறைவேற்றத் தி. மு. கழகம் விரும்புகிறது; அதிகாரிகள் இதை உணர்ந்து எங்கள் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும்' என்றுக் கேட்டுக்கொண்டார்.

மின்சாரத்துறை அமைச்சர் ஓ. பி. இராமன் தலைமை வகித்தார்.

வேளாண்மைத்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் ஆகியோரும் பேசினர்.

மதுரை மாவட்டத்தில் அரசின் சாதனைகளை எடுத்துரைக்கும் சிறப்பு மலரை மதுரை மேயர் எஸ். முத்து வெளியிட்டார்.

### நடக்க இருப்பவை

# அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டங்கள்

## 11—10—72

**தென்னேரி**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: டி. எஸ். வீரராகவன்; பேசுவோர்: அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து, கே.டி.எஸ். மணி, எம். கோபால் எம்.எல்.ஏ., தி. சு. இலட்சுமணன் எம்.பி., வி. பி. அகிலன், ஆர். கோபால், டி. சீனுவாசன், வெ. கன்னியப்பன், என். ஆர். முனிரத்தினம் மற்றும் பலர்.

**ரெங்கநாதபுரம்**

தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா—தந்தை பெரியார் பிறந்த நாள் விழா; மாலை 6 மணிக்கு கலைஞர் திடலில்; தலைவர்: எஸ் பெரியசாமி; பேசுவோர்: கேரள சுந்தரம் எம் சி., ஜெ. எஸ். இராசு எம்.எல்.ஏ., மு. அட்சயகோபால், வி. வெள்ளைச்சாமி, சுப்பிரமணியம், துரைசாமி, மு. முஸ்தபா, சி. துரைசாமி, கோபால், அல்லாபிச்சை, ந. அய்யன்பெருமாள், சுந்தரவேல், ஆர்.தேவராஜ் சண்முகம், கருணை, சு. பெ. சிவஞானம், மு. சுப்பிரமணியன், சிங்காரவேலு.

### முட்டுக்கட்டை நீங்குமா?

புதுடில்லி, அக் 10—

இந்தியா—பாகிஸ்தான இராணுவ அதிகாரிகளிடையே நடைபெற்றுவந்த எல்லை நிர்ணயப் பேச்சுவார்த்தையில மீண்டும் முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

# சென்னை 9 வது வட்டத்தில் மாநகராட்சி சமுதாய நிலையம்

## அமைச்சர் சத்தியவாணிமுத்து அடிக்கல் நாட்டுவார்

சென்னை 9-வது வட்டம் மீனாட்சியம்மன்பேட்டையில மாநகராட்சி சமுதாய நிலையக் கட்டடத்துக்கு அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அடிக்கல் நாட்டுவார்; இவ்விழா 11—10—72 மாலை 6 மணிக்கு மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமையிலும்—திரு. வி. முனுசாமி எம். சி. முன்னிலையிலும் நடைபெறும்.

# தென்னேரி அகரம் நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு

வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியம் தென்னேரி அகரம் ஊராட்சியின் மேநிலை நீர்த் தேக்கத் தொட்டியை 11—10—72 மாலை 5 மணியில் திரு.எம். கோபால் எம்.எல்.ஏ. தலைமையில அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் திறந்து வைப்பார்; வரவேற்பு: ஆர். முருகேசன்; பேசுவோர்: ஆர். கோபால், டி. சீனுவாசன், டி. குலசேகரன்.

# மாநகராட்சிப் பள்ளித் துணைக் கட்டடம்

## அமைச்சர் க. இராசாராம் அடிக்கல் நாட்டுவார்

சென்னை—சேத்துப்பட்டு செயலட்சுமிபுரத்தில் உள்ள மாநகராட்சித் துவக்கப் பள்ளித் துணைக் கட்டடத்துக்கு அமைச்சர் திரு. க. இராசாராம் அடிக்கல் நாட்டுவார்; இவ்விழா, 11—10—72 மாலை 5-மணிக்கு மேயர் திருமதி காமாட்சி செயராமன் தலைமையிலும்—திரு. இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. முன்னிலையிலும் நடைபெறும்.

# ஆண்டுக்கு நான்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாயிகள் முதலில் இரு போகம் நெல் சாகுபடி செய்தனர்; அதே நிலத்தில் மீண்டும் மணிலாக் கொட்டையும்—சோளமும் பயிரிட்டிருக்கின்றனர்.

இந்த நான்கு மகசூல்களையும் 365 நாட்களுக்குள்ளேயே முடித்திருக்கின்றனர்.